மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு
சுற்றறிக்கை இலக்கம் : 01/2020

என இல :- 2/2/1/1/33
மகாவலி, கமத்தொழில்,
நீர்ப்பாசன மற்றும் கிராமிய
அபிவிருத்தி அமைச்சு
இல: 80/5,
கொவிஜன மந்தீரய,
ரஜமல்வத்த ஒழுங்கை
பத்தரமுல்ல
2020. 06 25

அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின்
மேலதிகச் செயலாளர்களுக்கும்,
மாவட்ட செயலாளர்களுக்கும்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்,
மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயகம்,
அனைத்து பணிப்பாளர்கள் /மாகாண விவசாயப் பணிப்பாளர்கள்/
மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள்/பிரதான விவசாய விஞ்ஞானிகள்/
பிரதான விவசாய நிபுணர்கள்,
பூச்சிகொல்லி கட்டுப்பாட்டுப் பதிவாளர்/மேலதிகப் பணிப்பாளர்கள்/
மேலதிக மாகாண விவசாயப் பணிப்பாளர்கள்,
பிரதி விவசாயப் பணிப்பாளர்கள்/ பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்கள்,
நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் /உதவி விவசாயப் பணிப்பாளர்கள்

**இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் 2146/22 ஆம் இலக்க 2019.10.22 ஆந் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் உள்ளடக்கப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்.**

இலங்கை விவசாய சேவையில் மூன்றாம் (III) தரத்திலிருந்து இரண்டாம் (II) தரத்துக்கும் மற்றும் இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்துக்கும் பதவியுயர்த்தும் போது ஆகக் குறைந்த சேவைக் காலம் திருத்தம் செய்யப்பட்டதற்குரிய ஏற்பாடுகளை உள்ளடக்கி 2146/22 இலக்க 2019 ஒக்தோபர் 22 ஆந் திகதியிட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விவசாய சேவை சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது சேவைப் பிரமாணக் குறிப்பின் திருத்தத்துக்கு அமைவாக தற்பொழுது சேவையில் ஈடுபடுகின்ற இலங்கை விவசாய சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுகள் பின்வருமாறு மேற்கொள்ளப்படும்.

01. மூன்றாம் (III) தரத்திலிருந்து இரண்டாம் (II) தரத்துக்கு பதவியுயர்த்துதல்

1.1) 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் திருத்தப்பட்ட இலங்கை விவசாய சேவை சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து அல்லது 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதியிலிருந்து என்னும் குறித்த இரண்டு தினங்களுக்குப் பின்னர் வரும் திகதியிலிருந்து II தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவர்.

1.2)இலங்கை விவசாய சேவை சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 இன் உப இலக்கம் v இன் கீழ் காட்டப்பட்டுள்ள ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சி 01/2014 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையில் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தை பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்கள் உரிய தினத்தன்று ஏனைய அரச கரும மொழிகள் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களாகக் கருதப்படுவர்.

1.3)இலங்கை விவசாய சேவை சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 இன் உப இலக்கம் v இன் கீழ் காட்டப்பட்டுள்ள ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சி 01/2014 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களுக்கு 01/2014 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையில் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

1.4)

02. இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்துக்கு பதவியுயர்த்துதல்.

2.1) சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் II ஆந் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் III ஆந் தரத்தில் ஆறு வருடங்களுக்கு (06) மேற்பட்ட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கும் பின்வரும் விடயங்கள் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படும்.

(அ) II தரத்திலிருந்து I தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக பெற்றிருக்க வேண்டிய 10.2.1 இன் உப இலக்கம் v இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் படிப்பு தகைமையை பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக இச் சுற்றறிக்கை பகிரங்கப்படுத்தும் தினத்திலிருந்து ஐந்து வருட (05) காலத்தைத் தாண்டுகின்ற திகதி வரை சலுகைக்காலம் வழங்கப்படுவதுடன் குறித்த சலுகைக் காலத்துக்குள் பட்டப்பின் படிப்புத் தகைமையை பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்கள் இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக 10.2.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் பூர்த்தி செய்கின்ற திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவர்.

(ஆ) II தரத்திலிருந்து I தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக பெற்றிருக்க வேண்டிய 10.2.1 இன் உப இலக்கம் ii இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட (03) காலத்தைக் கொண்டதான சலுகைக் காலம் வழங்கப்படுவதுடன் குறித்த சலுகைக் காலத்துக்குள் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்கள் இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக 10.2.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் பூர்த்தி செய்கின்ற திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவர்.

2.2) சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு II ஆந் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் I தரத்துக்கு பதவியுயர்த்தும் போது 10.2.1 இன் i மற்றும் iv இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைக்காக பின்வரும் தகைமைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

(அ) II ஆந் தரத்தில் இரண்டு வருட (02) காலத்தைக் கொண்ட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் II ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தியதன் பின்னர் இரண்டு (02) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்துக்கு அமைவாக II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர் பதவியுயர்த்தப்படும் தினத்துக்கு முன்னரான இரண்டு (02) வருட காலத்துக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையைக் கொண்டிருத்தல்.

<u>குறிப்பு :-</u>

2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை விவசாய சேவையில் II ஆந் தரத்தில் இரண்டு ( 02) வருடங்களுக்கு மேற்பட்டதான செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இந்த ஏற்பாட்டுக்கு அமைவாக அன்றைய தினத்திலிருந்து I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுகின்ற உத்தியோகத்தர்களின் குறித்த இரண்டு (02) வருடங்களுக்கு மேற்பட்ட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை I தரத்தின் சேவைக் காலமாகக் கருதப்படும்.

2.3) சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு III ஆந் தரத்தில் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்டதான செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இந்த சுற்றறிக்கையின் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுகின்ற உத்தியோகத்தர்கள் I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படும் போது 10.2.1 இன் i மற்றும் iv இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைக்காக பின்வரும் தகைமைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

(அ) III மற்றும் II ஆந் தரங்களில் பன்னிரெண்டு (12) வருட காலத்தைக் கொண்ட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் பதினொன்று (11) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்துக்கு அமைவாக பதவியுயர்த்தப்படும் திகதிக்கு முன்னர் பன்னிரெண்டு (12) வருட காலத்துக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையைக் கொண்டிருத்தல்.

இச் சுற்றறிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் வெளியிடப்படுகின்றது.

சுமேத பெரேரா டப்லிவ்டப்லிவ்வீ ஆர்டப்லிவ்பீ ஆர்எஸ்பீ யுஎஸ்பீ என்டீயு
மேஜர் ஜெனரால் (இளைப்பாறிய)
செயலாளர்
மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு.